
## திராவிடத்தால் வாழ்கிறோம்

875

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


---

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

115

# கோவை மணியன்
# கழக மேடையும் கடிதங்களும்...




**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கோவை மணியன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1989-ஆம் ஆண்டு, தேர்தலின்போது 'தேசிய முன்னணி' என்ற பலமான கூட்டணியை ஏற்படுத்தியிருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். சென்னையில் நடைபெற்ற பிரமாண்டக் கூட்டத்துக்குப் பின்னர், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கழகத்தின் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தனர் கூட்டணிக் கட்சித் தலைவர்கள். அன்றைய ஆந்திராவின் முதல்வரும் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவருமான என்.டி.ராமராவ், தேசிய முன்னணியின் அமைப்பாளர் - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங், ஜனதா தள கட்சித் தலைவர்களில் ஒருவரான அஜித் சிங் என பலரும் பல பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டனர். சென்னையில், தேசிய முன்னணி தொடக்க விழாவின்போது நடை பெற்ற, கழக இளைஞர் அணியின் பிரமாண்ட அணிவகுப்பைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்தார் வி.பி.சிங். அப்போதைய சுற்றுப்பயணத்தில் அவருக்குக் கிடைத்த மற்றுமொரு வியப்பு கழக சொற்பொழிவாளர்களின் பேராற்றல்.

கோவையை அடுத்த மேட்டுப்பாளையத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவருக்கு முன் தொடர்ந்து மூன்றரை மணி நேரம் உரை நிகழ்த்தினார் கழக சொற்பொழிவாளர். அவரது பேச்சாற்றலில் வியந்து, அந்த மேடையிலேயே அவரைப் பாராட்டிப் பேசியதுடன், தனது உற்றநண்பரான தலைவர் கலைஞர் அவர்களிடமும் அந்தப் பேச்சாளரைச் சுட்டிக் காட்டினார். அப்படியாக சமூகநீதிக் காவலரிடம் பாராட்டுப் பெற்ற பேச்சாளர் கழக உடன்பிறப்பு கோவை மணியன்.

### நடத்துநர் பேச்சாளரானார்

கோவை, ஆலந்துறையை அடுத்த முகாசிமங்கலம் எனும் கிராமத்தில் பிறந்தவர் மணியன். பெற்றோர் வையாபுரியார் - காளியம்மாள். வையாபுரி அவர்கள் விடுதலை போராட்ட வீரர் என்பதால், அன்றைய காங்கிரஸ் பேரியக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அதனால், பிள்ளைகளை அதே உணர்வுடன் வளர்த்தார் வையாபுரி.

பள்ளியில் படிக்கும்போதே பேச்சாற்றலை வளர்த்துக் கொண்ட மணியன், பள்ளி அளவிலான பல பேச்சுப்போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்று, தனது எதிர்கால வாழ்க்கையை மேடைப் பேச்சுக்கு அர்ப்பணிப்பது என தீர்மானித்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததுபோல நிகழவில்லை. 1958-ஆம் ஆண்டில் உயர்கல்வி முடித்தவர், கோவையில் தனியார் பேருந்து நிறுவனத்தில் நடத்துநராகப் பணியில் சேர்ந்தார்.

கழகத்தின் வீச்சு, செயல், வேகம் எல்லாம் அன்றைய இளைஞர்களைப் பற்றி இழுத்துக் கொண்டிருந்த காலங்களில், அவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டே, 13 ஆண்டுகள் நடத்துனராக பணியாற்றினார். அவ்வப்போது, ஒருசில மேடைகளில் பேசிவந்தவர், பின்னர் ஒரு கட்டத்தில், கழகமும், கலைஞரும் என்று முழுநேரமாக தன்னை ஒப்புக் கொடுத்தார்.

1971-ஆம் ஆண்டில், செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று, கலைஞர் தலைமையில், பகுத்தறிவுச்சுடர் மன்னை நாராயணசாமி முன்னிலையில் கழகத்தில் இணைத்துக்கொண்டு தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். இணைந்த நாள் முதலே, கழகத்தின் முன்னணிப் பேச்சாளராக வலம் வரத்தொடங்கிய மணியன், மக்களை ஈர்க்கும் வகையில் பேசும் பேராற்றல் கொண்டவராகத் திகழ்ந்தார்.

### நூறு கூட்டங்களும் வர்ணனையும்...

மணியன் அவர்களின் மேடைப் பேச்சுக்காகவே, 1973-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தொடர்ந்து நூறு பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்தார் அன்றைய சேலம் மாவட்டச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம். அத்தனை கூட்டங்களிலும் கலந்துகொண்டு மக்களை ஈர்க்கும் வண்ணம் கொள்கை முழக்கமிட்ட மணியனுக்கு அண்ணாவைப்போல, கலைஞரைப்போல, வீரபாண்டி ஆறுமுகமும் கணையாழியை அன்பளிப்பு அளித்து மதிப்பளித்தார்.

நெருக்கடி நிலை காலத்தில், மாவட்ட மாநாடுகளை நடத்தி, கருத்து சுதந்திரத்துக்காக தீர்மானங்களை நிறைவேற்றிய கழகம், கோவையில் 5-வது மாநில மாநாட்டினை 1975 டிசம்பர் 25, 26, 27, 28 என நான்கு நாட்கள் நடத்தியது. டிசம்பர் 25 அன்று நடந்த மாநாட்டுப் பேரணியில் இருபது லட்சம் பேர் கலந்துகொண்டனர். ஏழு கிலோமீட்டர் நீளம் கொண்ட பேரணி, ஓர் இடத்தைக் கடக்க நான்கு மணி நேரம் ஆனது. அந்த ஊர்வலத்தை நேரலை வர்ணனை செய்தவர்களில் கோவை மணியனும் ஒருவர். அவரது நேரலை, ஊர்வலத்தின் எழுச்சிக்கு மேலும் உரமூட்டியது என மறுநாள் ஏடுகள் எழுதி இருந்தன.

> **கலைஞர் இரங்கல் செய்தியில் மணியனின் மடல்களை நினைவூட்டினார். 'தலைவரும், தலைமையும் இரு கண்கள்' என இயங்கிய இந்த தளகர்த்தர் என்றென்றைக்கும் நினைவில் நிற்பார்.**

'மிசா' நெருக்கடிச் சட்டத்தில், கழகத்தினர் கொத்துக் கொத்தாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது, எண்ணற்ற கழகத் தொண்டர்களுள் சிறந்த பேச்சாளரான கோவை மணியன் அவர்களும் சிறைப்பட்டிருந்தார். கழகம் நடத்திய அத்தனை போராட்டக் களத்திலும், அனைத்து தேர்தல் களத்திலும் அவரது முழக்கம் தவறாமல் இடம் பெற்றுள்ளது. தனது மேடைப்பேச்சுக்காக ஐந்துமுறை சிறை பிடிக்கப்பட்டுள்ளார் மணியன்.

1989-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் மேட்டுப்பாளையத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கோவை மணியன் அவர்கள் தொடர்ந்து மூன்றரை மணி நேரம் உரை நிகழ்த்தியபோதுதான், அதைக் கேட்ட சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள், மேடையிலேயே மணியனைப் பாராட்டிப் பேசினார்.

### ஆறாயிரம் கூட்டங்கள்

கழக வளர்ச்சி ஒன்றையே இலக்காகக் கொண்டிருந்த மணியன், தான் கலந்துகொண்ட முதல் மேடைப் பேச்சு முதல் இறுதி மேடைப் பேச்சுவரை அவற்றை தலைமைக்கு, தலைவர் கலைஞருக்கு உடனுக்குடன் தெரியப்படுத்திய உடன்பிறப்பாகத் திகழ்ந்தார். அந்தந்த ஊரில் இருந்தபடியே தபால் அட்டையில் தலைமைக் கழகத்துக்கு கடிதம் எழுதிவிடுவார். தவிர, ஒவ்வொரு மாதமும் தான் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களைப் பற்றியும், அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்பி வைப்பார். இப்படி, 25 ஆண்டுகளில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய புள்ளி விவரத்தினை தலைமைக் கழகத்துக்கு அனுப்பியிருக்கிறார் மணியன்.

அவரது அயராத இந்தப் பணியினைப் பாராட்டி, கலைஞர் தனது 'உடன்பிறப்புக்கு' எழுதும் கடிதமொன்றில் குறிப்பிட்டுப் பாராட்டினார். கழக மேடைகளில் கொள்கை முழக்கமிட்ட இவரது தொண்டினைப் பாராட்டிப் போற்றும் வகையில், 1998-ஆம் ஆண்டில் கழக முப்பெரும் விருதுகளில் கலைஞர் விருதினை அளித்து பெருமை சேர்த்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

கோவை கழக முன்னோடிகள் அனைவருடனும் தோழமை கொண்டிருந்த மணியன் அவர்கள், கழகத்தின் அடுத்த தலைமுறை பேச்சாளர்களுக்கு வழிகாட்டியாகவும், அவர்களுக்கு பிரச்சார மேடைகள் ஏற்படுத்தி தருவதிலும் முனைப்பு காட்டியவர் என இன்றைய தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பலரும் குறிப்பிட்டுப் புகழ்கின்றனர். குறிப்பாக, கழகத்தின் முன்னோடி பேச்சாளர்களில் எளிமையாக இருந்தவர் என்கின்றனர்.

2009-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி எதிர்பாராத வகையில் தனது இயக்கத்தை நிறுத்திக்கொண்ட கோவை மணியனுக்கு மாவட்டக் கழகமே திரண்டு வந்து இறுதி மரியாதை செய்தது. கலைஞர் இரங்கல் செய்தியில் மணியனின் மடல்களை நினைவூட்டினார். 'தலைவரும், தலைமையும் இரு கண்கள்' என இயங்கிய இந்த தளகர்த்தர் என்றென்றைக்கும் நினைவில் நிற்பார்.

...துடிக்கும்

---

## தமிழ் மட்டுமல்ல; ஆங்கிலமும் அலர்ஜியா?

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "இந்தியாவில் ஆங்கிலத்தில் பேசுபவர்கள் வெட்கப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை" என பேசியதற்கு, சமூக வலைத்தளங்களில் பலமான எதிர்வினைகளைக் காணமுடிகிறது.

ஆங்கிலம் தெரிந்தால், உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் பிழைத்துக்கொள்ள முடியும். ஆனால், இந்தியை வைத்துக்கொண்டு குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டிய கதைதான் நடக்கும் என கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

'தமிழ்நாடு ஏன் இருமொழிக் கொள்கையில் உறுதியாக நிற்கிறது தெரியுமா?' என முகநூலில் பதிவிட்டுள்ளார் பத்திரிகையாளர் அன்புகுமார்.

"இங்கேயும் இந்தி நுழைந்திருந்தால், இந்திதான் தமிழைவிட சிறந்தமொழி என்று நம்ப வைத்திருப்பார்கள்.

நாம் உலகளாவிய வர்த்தகத்தில் இருக்கிறோம். உலகம் அறிந்த தமிழினமாகத் திகழ்கிறோம். நம் அண்டை நாடான இலங்கை தொடங்கி, கனடா, சிங்கப்பூர் என எங்கெங்கிலும் ஒலிக்கிறது தமிழ். சிங்கப்பூரில் ஆட்சிமொழியாகவே இருக்கிறது தமிழ்.

உலகப் பொதுமறையைத் தந்திருக்கிறோம். ஆனால், எந்தவொரு இலக்கிய வளமும் இல்லாத, பண்பாடும் கலாச்சாரமும் இல்லாத ஒரு மொழியை உயர்வாக நினைத்து திணிக்கிறார்கள் என்றால், இதுவும் ஒருவகை சனாதனம்தான்.

இந்திய ரூபாய் நோட்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 18 மொழிகள் இருக்கும். அது, எந்த மொழியைவிடவும் எந்த மொழியும் தாழ்வும் இல்லை உயர்வும் இல்லை என்பதை உணர்த்தும்.

ஆனால், நமது தாய்மொழி தொன்மை நிறைந்தது என்பதை ஆராய்ச்சிப் பூர்வமாக நிரூபித்துவிட்டு, தமிழே மூத்தமொழி என்று உரிமை கோருகிறோம். அப்படித்தான் டாக்டர் கலைஞரால் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்தது. இதுவரை தமிழ்தான் அவர்களுக்கு அலர்ஜி என்று நினைத்திருந்தோம். ஆனால் ஆங்கிலமே அவர்களுக்கு அலர்ஜி என்பதை இப்போதுதான் தெரிந்துகொண்டோம்." என்கிறது அவரது பதிவு.

---

## ஃப்ளாஷ்பேக்





நாத்திகம் நாகராசன்

### தலைவரிடம் பெற்ற வாழ்த்து!

1992-ஏப்ரல் அன்று நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டேன், இதையொட்டி அன்றைய கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களையும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றபோது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– நாத்திகம் நாகராசன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**மாவட்ட அமைப்பாளர்,**
**கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நம் வேரு

### 1929-இல் மீண்டும் நீதிக்கட்சி ஆட்சி!

1929-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் நீதிக்கட்சி பெருவாரியான பலத்தைப்பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த வெற்றிக்குப் பெரியாரின் பிரச்சாரமும், சர் பி.டி.இராசனின் உழைப்புமே காரணமாகும். பொப்பிலி அரசர் முதல்வராகவும், சர் பி.டி.இராசன், குமாரசாமி ரெட்டியார் கூட்டு அமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131